**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திருமதி.M.பிரவீணா, M.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி
**உத்தமபாளையம்.**

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 09-ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண். 9/2026**
(Original Suit CNR No. TNTH06-000-008-2026)

திரு. துரைபாண்டியன் . . . வாதி

/எதிராக/

1) V.விஜயலட்சுமி,
2) செல்வி. ராஜேஸ்வரி

. . . பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 06.07.2026 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சிவக்குமார்,M.L., அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணையானது சார்வு செய்யப்பட்டும், அவர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மேற்படியார்களுக்கு எதிராக 27.03.2026 ம் தேதியில் ஒரு தலைப்பட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்

**தீர்ப்புரை**

பிரதிவாதிகள் ரூ.93,175/- தொகையைச் செலுத்தவும், அசல் தொகையான ரூ.75,000/-க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் மேற்படி தொகையானது வசூலாகும் வரை ஆண்டுக்கு 12% வட்டி விகிதம் சேர்த்து திருப்பி செலுத்தும் பொருட்டும், தாவா செலவுதொகையை செலுத்தும் பொருட்டும் உத்தரவிடவேண்டி தாவா தாக்கல்.

**2. வழக்குரையின் சுருக்கம்**

இவ்வழக்கின் பிரதிவாதிகள் இருவரும் தாய் மற்றும் மகள் உறவுமுறை என்றும், மேற்படியார்கள் 16.01.2024ம் தேதியில் வாதியின் இல்லத்திற்குச் சென்று, தங்கள் குடும்பச் செலவுகளுக்காகவும், முதல் பிரதிவாதியின் தொழிலை மேம்படுத்துவதற்காக வாதியிடமிருந்து ரூ.75,000/– கடனாகப் பெற்று, அதே தேதியில், மேற்படி தொகைக்காக தாவா பிரதிவாதிகள் கடனுறுதிச்சீட்டை வாதிக்கு எழுதிக்கொடுத்ததாகவும், அதன்படி ரூ.75,000/–க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு 12% வட்டி என நிர்ணயிக்கப்பட்டு, மேற்படி வட்டியை மாதந்தோறும் பிரதிவாதிகள் செலுத்த ஒப்புக்கொண்டதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதி பிரதிவாதிகளிடம் அசல் தொகையையும், அதற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்துமாறு கோரியதாகவும், ஆனால், பிரதிவாதிகள் அசல் அல்லது வட்டி என எதற்கும் எந்தவொரு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தவில்லை என்றும், மாறாக அவர்கள் காலதாமதம் செய்யும் உத்திகளையே கையாண்டதாகவும், 30.09.2025 மற்றும் 23.10.2025 ஆகிய தேதிகளில் கடன் தொகையையும், அதற்கான வட்டியையும் சட்ட அறிவிப்பைப் பெற்ற 7 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பிரதிவாதிகளுக்கு வாதி சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், ஆனால், பிரதிவாதிகள் வேண்டுமென்றே அந்த அறிவிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் தவிர்த்ததுடன், எந்தவொரு பதில் அறிவிப்பையும் அனுப்பவில்லை என்றும் எடுத்துரைக்கபட்டுள்ளது.

மேலும், இதுவரை பிரதிவாதிகள் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தவில்லை என்றும், கடன் தொகையை வசூலிக்க இந்நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வாதிக்கு வேறு வழியில்லை என்றும், எனவே, அத்தொகையை வசூலிப்பதற்காக வாதி இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளதாகவும், கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆகவே, பிரதிவாதிகள் ரூ.93,175/– தொகையைச் செலுத்தவும், அசல் தொகையான ரூ.75,000/–க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் மேற்படி தொகையானது வசூலாகும் வரை ஆண்டுக்கு 12% வட்டி விகிதம் சேர்த்து திருப்பி செலுத்தும் பொருட்டும், தாவா செலவுதொகையை செலுத்தும் பொருட்டு உத்தரவிடுமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணையானது சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக இருந்ததால், மேற்படியாருக்கு எதிராக 27.03.2026 தேதியில் ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

4. வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆகவும், குணபாலன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5.இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி தாவாவில் கோரிய பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

6. **வாதி தரப்பு வாதம் யாதெனில்,** தாவா பிரதிவாதிகள் மகள் மற்றும் தாயார் உறவு முறை என்றும், மேற்படியார்கள் வாதியிடம் 16.01.2024 ம் தேதியில் ரூ. 75,000/-த்தை தங்களது குடும்ப செலவிற்காகவும், 1ம் பிரதிவாதியின் தொழிலை மேம்படுத்தும் பொருட்டு கடனாக பெற்றதாகவும், மேற்படி கடன் தொகையான ரூ.75,000/-த்திற்கு மாதம் 12 சதவீதம் வட்டி என்று நிர்ணயம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகைக்கான வட்டியை ஒவ்வொரு மாதமும் செலுத்த ஒப்புக் கொண்டு கடனுறுதிச் சீட்டு ஏற்படுத்திக் கொடுத்ததாகவும், ஆனால் பிரதிவாதிகள் மேற்படி அசல் தொகையையோ அல்லது வட்டியையோ செலுத்த முன்வரவில்லை என்றும், இது குறித்து 30.09.2025 மற்றும் 23.10.2025 தேதியில் சட்ட அறிவிப்பு அனுப்பியும் பிரதிவாதியானவர் பதில் அறிவிப்போ அல்லது தொகையையோ செலுத்த முன்வரவில்லை என்றும், ஆகவே தாவா பிரதிவாதிகள் ரூ. 93,175/- மற்றும் மேற்படி தொகையானது திருப்பி செலுத்தப்படும் வரை அசல் தொகையான ரூ. 75,000/-த்திற்கு 12 சதவீதம் வட்டியுடன் சேர்த்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறு வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 16.01.2024 தேதியிட்ட கடனுறுதி சீட்டானது வா.சா.ஆ.1 ஆகவும், 30.09.2025 அஞ்சலக ரசீதுடன்

கூடிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி அறிவிப்பானது திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறையானது வா.சா.ஆ. 3 ஆகவும், 23.10.2025 தேதியிட்ட சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆகவும், மேற்படி அறிவிப்பானது திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை வா.சா.ஆ.5 ஆகவும், வாதியின் வங்கிக் கணக்கு பட்டியல் வா.சா.ஆ.6 ஆகவும், வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும் போது இவ்வழக்கு பிரதிவாதிகள் வா.சா.ஆ.1ன் படி 16.01.2024 தேதியில் வாதியிடம் ரூ.75,000/- கடன் பெற்றதும், மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு 12 சதவீதம் வட்டியானது நிர்ணயிக்கப்பட்டுள்ளதும், மேற்படி கடன் தொகைக்கு கடனுறுதிச் சீட்டானது இவ்வழக்கு வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளதும் தெரியவருகிறது. இவ்வழக்கில் வாதி தரப்பில் பலமுறை கேட்டும் தாவா பிரதிவாதியானவர்கள் வட்டி மற்றும் அசலை திரும்ப செலுத்த முன்வரவில்லை என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆன 30.09.2025, 23.10.2025 தேதியிட்ட சட்ட அறிவிப்புகளானது பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டும், அவ்வறிவிப்புகளானது திருப்பப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.1 ஆன கடனுறுதிச் சீட்டில் சாட்சிக் கையொப்பம் செய்த குணபாலன் என்பவர் வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில் வாதி வழக்குரையில் எடுத்துரைக்கப்படும் பொருண்மைகளை அனுசரித்தவாறே சாட்சியம் அளித்துள்ளார். வாதிதரப்பு சாட்சிய சான்றாவணங்களை பொய்பிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணையானது சார்வு செய்யப்பட்டும் தோன்றா தரப்பினர்களாக இருந்ததால், மேற்படியார்களுக்கு எதிராக 04.03.2026 தேதியில் இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், வாதியானவர் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் தனது வழக்கை நிரூபணம் செய்துள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்து, இவ்வழக்கு பிரதிவாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும் வாதிக்கு தாவா தொகையான

ரூ. 93,175/—ஐ பின்வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9. முடிவாக,**

தாவா அனுமதிக்கப்பட்டு, இவ்வழக்கு பிரதிவாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும் தாவா தொகையான ரூ.93,175/— யை வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பு தேதி வரை அசல் தொகையான ரூ.75,000/—க்கு 9 % வட்டியும், மேற்படி தொகை வசூலாகும் தேதிவரை 6% வட்டியும், தாவா செலவுத் தொகையும் சேர்த்து கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

PRAVEENA Digitally signed by PRAVEENA
Date: 2026.07.09
18:19:39 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**வாதி தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| வா.சா.1. | துரைபாண்டியன் |
| வா.சா.2 | குணபாலன் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 16.01.2024 | கடனுறுதி சீட்டு |
| வா.சா.ஆ.2 | 30.09.2025 | அஞ்சலக ரசீதுகளுடன் கூடிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.3 | 03.10.2025 | மேற்படி அறிவிப்பானது திருப்பப்பட்டதற்கான அஞ்சல உறைகள் (எண்ணிக்கைகள் — 2) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 23.10.2025 | அஞ்சலக ரசீதுகளுடன் கூடிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.5 | 24.10.2025 | மேற்படி அறிவிப்பானது திருப்பப்பட்டதற்கான அஞ்சல உறைகள் (எண்ணிக்கைகள் – 2) |
| வா.சா.ஆ.6 | -- | வாதியின் வங்கி கணக்கு பட்டியல் |
| வா.சா.ஆ.7 | -- | வா.சா.2 ன் ஆதார் அடையாள அட்டை நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.</u>**

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.07.09 18:19:45 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
உத்தமபாளையம்
**<u>சீரானத்தீர்ப்புரை</u>**
அசல் வழக்கு எண். 9/2026
நாள் : 09.07.2026